**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 184/2022 |
| Name | : Maruthamuthu |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கணியூர் ஆஸ்பத்திரி மேட்டில் வசித்து வருகிறேன். கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். எனது அப்பா கூலி வேலை செய்து வருகிறார். எனது அம்மா வீட்டில் உள்ளார். 04.11.2021 ம் தேதி அதிகாலையில் டீ கடைக்கு செல்ல வேண்டி மடத்துக்குளம் – தாராபுரம் ரோட்டில் செந்தில் வே பிரிட்ஜில் வடபுறம் ரோட்டின் இடது ஓரமாக நடந்து சென்ற போது 14 என்ற எண் கொண்ட அரசுப் பேருந்து மோதிவிட்டதாக பஸ்சில் பயணம் செய்து வந்த வேல்முருகன், வினோத் ஆகியோர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். என் அப்பாவிற்கு பேருந்து மோதியதில் தலை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் ரோட்டின் வலது ஓரமாக கீழே கிடந்தார். ஆம்புலன்ஸ் மூலமாக மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி சிகிச்சை அளித்தேன். உடுமலை கோகுல் கிளினிக் மருத்துவமனையில் தலையில் ஸ்கேன் செய்து அங்கிருந்து கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம். என்

அம்மாவை என் அப்பாவுடன் இருக்க வைத்து விட்டு நான் கணியூர் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்தை ஏற்படுத்திய பேருந்தை ஓட்டியவர் பெயரை பின்னால் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் அவர் பெயர் தனசேகர் ஆகும். உதவி ஆய்வாளர் விசாரணை செய்ய வந்த போது உடன் இருந்தேன். விபத்து நடந்த இடத்தை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்குச் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மற்றவர்கள் சொல்லி தெரியும். எப்படி விபத்து நடந்தது என்பதை மற்றவர்கள் சொல்லித்தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பேருந்தில் வந்ததாக சொல்பவர்கள் பெயர் வினோத் குமார் மற்றும் வேல்முருகன் ஆவார்கள். அவர்கள் இருவரும் பஸ்சில் இருந்து இறங்கி நின்ற பிறகு பேருந்து நகர்ந்து சென்றது என்றால் சரிதான். வினோத் குமார் மற்றும் வேல்முருகன் டமார் என்று சத்தம் கேட்டு பின்னர் அது பஸ் என்று தெரிந்து சொன்னார்கள் என்றால் சரிதான். வினோத் குமார் மற்றும் வேல்முருகன் இறங்கிய பிறகு எத்தனை அடி துரம் தள்ளி விபத்து நடந்தது என்றால் இறங்கிய இடத்தில் இருந்து சுமார் 50 அடி துரம் இருக்கும். சத்தம் கேட்ட பிறகு அவர்கள் சென்று பார்த்தார்கள் என்றால் சரிதான். பேருந்து டமார் என்று சத்தம் கேட்ட இடத்தில் இருந்து 10 அடி தள்ளி நின்று பார்த்துவிட்டு சென்றது என்றால் சரிதான். விபத்து மண் ரோட்டில் நடந்தது. பேருந்தும் மண் ரோட்டில் தான் சென்றது. விபத்து நடந்த இடத்தில் தார் ரோட்டின் அகலம் 60 மண் ரோட்டின் அகலம் 20 அடி என்றால் சரிதான். விபத்து மண் ரோட்டில் தான் நடந்தது. விபத்து நடந்த இடத்தை மற்றவர்கள் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதை வைத்து தான் விபத்து நடந்ததாக சொல்லும் இடத்தை அடையாளம் காட்டினேன். வேறு யாரும் காட்டவில்லை.

(2) நான் அடையாளம் காட்டிய இடத்தை போலீசார் பார்த்து வரைபடம் தயார் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் விபத்து எதுவும் நடக்கவில்லை பேருந்து ஓட்டுநர் எந்த தவறும் செய்யவில்லை என்றால்

சரியல்ல. எனது தகப்பனார் ரோட்டின் ஓரத்தில் சென்று தவறி விழுந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் பட்டென்று அடித்து தான் விபத்து நடந்தது. எனது தகப்பனாரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது பேருந்து ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் ஜோத்தம்பட்டி பிரிவு ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பிரிவு ரோட்டிற்கு பக்கத்தில் மடத்துக்குளம் – தாராபுரம் ரோட்டில் வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக வேண்டும் என்றே பொய்யாக சொல்கிறேன். வழக்கு விபத்திற்கும் பேருந்து ஓட்டுநருக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.05 09:14:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 184/2022 |
| Name | : Angathal |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூரில் வசித்து வருகிறேன். கூலி வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். காயம்பட்டவர் எனது கணவர் ஆவார். இருவரும் கட்டிட வேலைக்கு செல்கிறார்கள். சுமார் 3 வருடங்களுக்கு முன்னால் என் கணவர் வே பிரிட்ஜ்க்கு வடபுறம் டீ குடிக்க சென்ற போது 14 என்ற எண் கொண்ட பேருந்து தாராபுரம் சென்ற போது மேபுறத்து எல்லையில் என் கணவர் மீது பஸ் டப் என்று மோதி என் கணவரின் கால் நசுங்கியது தலையில் அடிப்பட்டது. ரத்தம் வந்தது. கணேஷ் என்பவர் என்னிடம் சொன்னார். நானும்,மகனும் வந்து பார்த்தோம். பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். ஆம்புலன்ஸ் மூலம் மடத்துக்குளம் மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். மேல் சிகிச்சைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். உடுமலையில் தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். அவர்கள் முடியாது என்று சொன்னதால் கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக என்

கணவரை கொண்டு சேர்த்தோம். பின்பு எனது மகனை புகார் கொடுப்பதற்காக அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் என் மகன் விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) விபத்து பற்றி கணேசன் சொன்னதன் பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் இடம் ஜோத்தம்பட்டி பிரிவு ரோடு அருகே உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் இடம் தென்வடல் தார் ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தின் அருகே ரோட்டின் கிழபுறத்தில் டீ கடை உள்ளது என்றால் கிழபுறம் இல்லை மண் ரோட்டிற்கு மேபுறத்தில் தான் டீ கடை உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இருந்து சுமார் 10-20 அடி துரத்தில் டீ கடை இருக்குமா என்றால் இருக்கும். அந்த துரத்தில் தான் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் பஸ் நின்று பயணிகளை இறக்கிவிட்ட பின்பு தான் பஸ் கிளம்பியது என்றால் டீ கடைக்கு தெற்கே அடித்து விட்டு டீ கடையின் அருகில் பஸ் நின்று பின்பு இறங்கி வந்து பார்த்தார்கள். விபத்து நடந்த இடத்திற்கு 10 அடி தள்ளி தான் வடபுறத்தில் பஸ் நின்று ஆட்களை இறக்கிவிட்டதா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் தெரு விளக்கு எதுவும் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லும் இடம் தார் ரோடா, மண் ரோடா என்றால் தார் ரோட்டை ஒட்டி மேபுறத்து எல்லையில் மண் தடம் ஆகும்.

(2) மற்றவர்கள் சொல்லியதை வைத்து தான் இந்த விபத்து பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் விபத்து எதுவும் நடக்கவில்லை பேருந்து ஓட்டுநர் மீது தவறு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வேல்முருகன், வினோத்குமார் சொன்னதன் பேரில் தெரியும். விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை கோவை மருத்துவமனையில் வைத்து மறு நாள் விசாரித்தார்கள்.வேறு எங்கும் விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் என்னையும், என் தம்பியையும் விசாரித்தார்கள். நான் சொன்ன நேரத்தில் நான் சொன்னது போல் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.05 09:14:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 184/2022 |
| Name | : Subramani |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கணியூர் ஆஸ்பத்திரி மேட்டில் வசித்து வருகிறேன். நான் எப்போதும் வழக்கமாக காலை 5.30 மணிக்கு இயற்கை உபாதைக்காக வே பிரிட்ஜ்க்கு வடபுறமாக போன போது பணி மூட்டமாக இருந்தது. ரோட்டின் ஓரத்தில் தெற்கிலிருந்து வடக்காக போய்க்கொண்டிருந்த போது திரும்பி பார்த்த போது காரா என்னவென்று தெரியவில்லை என் மீது மோதி விட்டது. டீ கடையில் இருந்து ஆட்கள் வந்து என் வீட்டிற்கு தகவல் கொடுத்தார்கள். நான் அடிபட்டதும் புளிய மரத்தை பிடித்துக்கொண்டேன். எனக்கு தலை மற்றும் காலில் அடிப்பட்டது. இடுப்பு, தாலை, கால் போன்ற இடங்களில் அடிப்பட்டது. பஸ் மோதியது என்று வீட்டில் சொல்லி எனக்கு தெரிய வந்தது. எனக்கு மருத்துவமனைக்கு சென்ற போது எதுவும் ஞாபகத்தில் இல்லை.போலீசார் என்னை விசாரித்த விவரமே புரியவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க**

**கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கேள்வி –** எனது விசாரணையில் நான் 04.11.2021 ம் தேதி அதிகாலை 05.45 மணிக்கு மடத்துக்குளம் – கணியூர் ரோட்டில் செந்தில் வேபிரிட்ஜ்க்கு வடபுறமாக ரோட்டின் இடதுபுறம் வடக்கு நோக்கி நடந்துசென்ற போது மடத்துக்குளத்தில் இருந்து கணியூர் வழியாக செல்லும் 14 எண் அரசுப் பேருந்து வேகமாக வந்து என் மீது மோதி எனக்கு தலையில் வலது பக்கம் ரத்தக் காயமும், வலது பாதங்கள் விரல்களில் ரத்தக் காயம் ஏற்பட்டது என்றும், பக்கத்தில் இருந்து வந்தர்கள் துக்கி உட்கார வைத்து என் மகனுக்கு தகவல் சொன்னார்கள் என்றும், அவர்கள் என்னை ஆம்புலன்ஸ் மூலம் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்னை உடுமலை கோகுல் பாலிகிளினிக் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தும் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் நான் அங்கிருந்து போது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் ?

பதில் – எனக்கு விபத்து நடந்ததற்கு பின்னிட்டு எதுவும் ஞாபகம் இல்லை. அதற்கு முன்பு கட்டிட வேலைக்கு சென்றேன். என் தலையை ஸ்கேன் செய்து பார்த்தார்களா என்றால் எனக்கு ஞாபக சக்தி இல்லை அது பற்றி எனக்கு தெரியவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாணை இல்லை.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.05 09:14:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்